# குர்பானியின் சட்டங்கள்

தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு



جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# குர்பானியின் சட்டங்கள் 1

## அல்லாஹ்வுக்காக தூய எண்ணத்துடன் குர்பானியை நிறைவேற்ற வேண்டும்

لَنْ يَّنَالَ اللّٰهَ لُحُوْمُهَا وَلَا دِمَآؤُهَا
وَلٰكِنْ يَّنَالُهُ التَّقْوٰى مِنْكُمْ

குர்பானியின் மாமிசங்களோ, அவற்றின் உதிரங்களோ அல்லாஹ்வை ஒரு போதும் அடைவதில்லை. ஆனால் உங்களுடைய தக்வா ( எனும் பயபக்தி) தான் அவனை அடையும்

فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ

எனவே, உம் இறைவனுக்கு நீர் தொழுது, குர்பானியும் கொடுப்பீராக.

அல்குர்ஆன் 22: 37, அல்குர்ஆன் 108: 2

# குர்பானியின் சட்டங்கள் 2-A

## பெருநாள் தொழுகைக்குப் பிறகு குர்பானி கொடுத்தல்

நபி (ﷺ) அவர்கள் (ஈதுல் அள்ஹா பெருநாளில்) உரையாற்றியதை நான் கேட்டேன். அவர்கள் (தமது உரையில்) “நாம் இன்றைய தினம் செய்யும் முதல் வேலை (பெருநாள் தொழுகை) தொழுவதாகும். பிறகு திரும்பி வந்து குர்பானிப் பிராணிகளை அறுப்பதாகும். யார் (இதைச்) செய்கிறாரோ அவர் நமது வழிமுறையைப் பின்பற்றியவர் ஆவார்” என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்:பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள், புகாரி 951

# குர்பானியின் சட்டங்கள் 2-B

## பெருநாள் தொழுகைக்குப் பிறகு குர்பானி கொடுத்தல்

நான் நபி (ﷺ) அவர்களுடன் நஹ்ருடைய (துல்ஹஜ் பத்தாவது) நாளன்று இருந்தேன். அப்போது அவர்கள், “(பெருநாள்) தொழுவதற்கு முன்பே (குர்பானிப் பிராணியை) அறுத்துவிட்டவர் அதனிடத்தில் (அதற்குப் பதிலாக) வேறொன்றை (தொழுகைக்குப்பின்) அறுக்கட்டும். அறுக்காமல் இருப்பவர் (தொழுகை முடிந்தவுடன்) அறுக்கட்டும்” என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: ஜுன்தப் பின் சுஃப்யான் அல்பஜலீ (ரலி) அவர்கள், புகாரி 5562

# குர்பானியின் சட்டங்கள் 3

**ஒருவரிடம் வசதியிருந்தால் அவர் குர்பானி கொடுக்க வேண்டும், வசதியில்லாத போது கடன் வாங்கி குர்பானி கொடுக்க வேண்டியதில்லை.**

‘ஒன்றைச் செய்ய வேண்டாமென உங்களுக்கு நான் தடை விதித்தால் அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். ஒன்றைச் செய்யுமாறு உங்களுக்கு நான் கட்டளையிட்டால் அதை உங்களால் முடிந்த அளவுக்குச் செய்யுங்கள்‘ என அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 7288**

# குர்பானியின் சட்டங்கள் 4

## குர்பானியை எப்போது கொடுக்க வேண்டும் ?

நபி (ﷺ) அவர்கள் “யார் (பெருநாள்) தொழுகைக்கு முன்னால் (பிராணியை) அறுக்கின்றாரோ அவர் தமது சொந்தத் தேவை)க்காகவே அறுத்தவர் ஆவார். யார் தொழுகைக்குப் பின்னால் அறுக்கின்றாரோ அவரது (குர்பானி) வழிபாடு பூர்த்தியாகிவிடும். மேலும், அவர் முஸ்லிம்களின் வழிமுறையைப் பின்பற்றியவர் ஆவார்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்:அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், புகாரி 5546

# குர்பானியின் சட்டங்கள் 5-A

## குர்பானி கொடுப்பவர் செய்யக்கூடாதவை

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (துல்ஹஜ் மாதத்தின் முதல்) பத்து நாட்கள் வந்து, உங்களில் ஒருவர் குர்பானி கொடுப்பதற்கு எண்ணினால், அவர் தமது தலைமுடியிலிருந்தும் மேனியிலிருந்தும் (நகம், ரோமம் ஆகிய) எதையும் வெட்ட வேண்டாம்.

குறிப்பு: குர்பானி கொடுப்பவர் மட்டுமே இந்த சட்டத்தைப் பேண வேண்டும். வீட்டிலுள்ள அனைவருமல்ல.

அறிவிப்பாளர்: உம்மு சலமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். முஸ்லிம் 3997

# குர்பானியின் சட்டங்கள் 5-B

## குர்பானி கொடுப்பவர் செய்யக்கூடாதவை

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: தம்மிடம் குர்பானிப் பிராணி உள்ள ஒருவர், குர்பானி கொடுக்க விரும்பியுள்ளபோது, (துல் ஹஜ் மாதம் முதல்) பத்து நாட்கள் ஆரம்பித்துவிட்டால், அவர் முடியையோ நகங்களையோ களைய வேண்டாம்.

குறிப்பு: குர்பானி கொடுப்பவர் மட்டுமே இந்த சட்டத்தைப் பேண வேண்டும். வீட்டிலுள்ள அனைவருமல்ல.

அறிவிப்பாளர்: உம்மு சலமா (ரலி) அவர்கள். முஸ்லிம் 3998

# குர்பானியின் சட்டங்கள் 6

## குர்பானிப் பிராணிகள்: ஒட்டகம், மாடு, ஆடு

’தங்களுக்குரிய பலன்களை அடைவதற்காகவும்; குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ள (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) நாற்கால் பிராணிகள் மீது அவன் பெயரைச் சொல்(லி குர்பானி கொடுப்)பவர்களாகவும் (வருவார்கள்).

குறிப்பு : இந்த வசனத்தில் இடம் பெறும் ’அல் அன்ஆம்’ என்ற வார்த்தை ஆடு, மாடு, ஓட்டகம் ஆகிய மூன்று பிராணிகளையே குறிக்கும். ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களிலும் ஒட்டகம், மாடு, ஆடு ஆகியவைகளை குர்பானி கொடுத்ததாகவே இடம் பெற்றுள்ளது.

அல்குர்ஆன் 22: 28

# குர்பானியின் சட்டங்கள் 7-A

## பிராணிகளின் தன்மைகள்

தெளிவாகத் தெரியும் நொண்டி, தெளிவாகத் தெரியும் கண் பார்வைக் குறைவு, தெளிவாகத் தெரியும் நோய், எலும்பில் மஜ்ஜை இல்லாத மெலிவு ஆகிய குறைபாடுகள் உடையவற்றைக் குர்பானி கொடுப்பது கூடாது’ என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அல் பராஃ இப்னு ஆஸிப் (ரலி), திர்மிதி 1417.

# குர்பானியின் சட்டங்கள் 7-B

## பிராணிகளின் தன்மைகள்

நபி (ﷺ) அவர்கள் உட்பகுதியில் பாதி கொம்பு உடைந்த ஆடு குர்பானி கொடுக்கப்படுவதை தடுத்தார்கள்.

அறிவிப்பாளர்: அலி (ரலி) அவர்கள், நஸாயி 4301

# குர்பானியின் சட்டங்கள் 8

## பிராணியின் வயது

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: ஓராண்டு பூர்த்தியான ஆட்டையே அறுத்துக் குர்பானி கொடுங்கள். அது கிடைக்காவிட்டால் செம்மறியாட்டில் (ஆறு மாதத்திற்கு மேல்) ஒரு வயதுக்குட்பட்டதை அறுத்துக் குர்பானி கொடுங்கள்.

குறிப்பு: செம்மறியாடு எனில் ஆறு மாதங்கள் பூர்த்தியடைந்தது. வெள்ளாடு எனில் ஒரு வருடம் பூர்த்தியடைந்தது. மாடு எனில் இரு வருடம் பூர்த்தியடைந்திருத்தல். ஒட்டகம் எனில் ஐந்து வருடங்கள் பூர்த்தியடைந்திருத்தல்.
ஹதீஸில் வரும் 'முஸின்னா' என்ற வார்த்தை இந்த வயதைத்தான் குறிக்கும்.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள்., முஸ்லிம் 3971

# குர்பானியின் சட்டங்கள் 9-A

## எத்தனை பேர் சேர்ந்து குர்பானி கூட்டாகக் கொடுக்கலாம்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடன் நாங்கள் ஹஜ் மற்றும் உம்ராவில் ஓர் ஒட்டகத்தில் ஏழு பேர் வீதம் கூட்டு சேர்ந்தோம்

அறிவிப்பாளர்: ஜாபிர் (ரலி), முஸ்லிம் 2325

# குர்பானியின் சட்டங்கள் 9-B

## எத்தனை பேர் சேர்ந்து குர்பானி கூட்டாகக் கொடுக்கலாம்

’ஒரு மாடு ஏழு நபருக்கும், ஒரு ஒட்டகம் ஏழு நபருக்கும் (கூட்டு சேர போதுமானது) என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி), அபூதாவுத் 2425

# குர்பானியின் சட்டங்கள் 10-A

## பிராணியை அறுக்கும் முன் கவனிக்க வேண்டியவை

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கறுப்பில் நடக்கின்ற, கறுப்பில் படுக்கின்ற, கறுப்பில் பார்க்கின்ற (கால்கள்,வயிறு, கண் ஆகிய பகுதிகள் கறுப்பு நிறத்தில் அமைந்த) கொம்புள்ள செம்மறியாட்டுக் கடா ஒன்றைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டார்கள்.

அவ்வாறே குர்பானிக்காக அது கொண்டு வரப்பட்டபோது அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் (என்னிடம்), 'ஆயிஷா! அந்தக் கத்தியை எடு' என்றார்கள். பிறகு 'அதை ஒரு கல்லில் நன்றாகத் தீட்டு' என்றார்கள். அவ்வாறே நான் செய்தேன்.
பிறகு அந்தக் கத்தியை வாங்கி, அந்தச் செம்மறியாட்டைப் பிடித்து, சரித்துப் படுக்கவைத்து அறுத்தார்கள். (அறுப்பதற்கு முன்) பிஸ்மில்லாஹ். அல்லாஹும்ம தகப்பல் மின் முஹம்மதின் வ ஆலி முஹம்மதின் வமின் உம்மத்தி முஹம்மதின் (அல்லாஹ்வின் பெயரால்! இறைவா! முஹம்மதிடமிருந்தும் முஹம்மதின் குடும்பத்தாரிடமிருந்தும் முஹம்மதின் சமுதாயத்தாரிடமிருந்தும் இதை ஏற்றுக் கொள்வாயாக!)' என்று கூறி, அதை அறுத்தார்கள்.

**அறிவிப்பாளர்:ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 3977**

# குர்பானியின் சட்டங்கள் 10-B

## பிராணியை அறுக்கும் முன் கவனிக்க வேண்டியவை

நான் இரண்டு விஷயங்களை அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடமிருந்து மனனமிட்டுள்ளேன்.

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் எல்லாவற்றிலும் எளிய முறையை விதியாக்கியுள்ளான். எனவே (பிராணியைக்) கொல்லும்போதும் எளிய முறையில் கொல்லுங்கள்.(பிராணியை) அறுக்கும்போதும் எளிய முறையில் அறுங்கள். உங்களில் ஒருவர் அறுப்பதற்கு முன் கத்தியைத் தீட்டிக்கொள்ளட்டும். அறுக்கப்படும் பிராணியை ஆசுவாசப்படுத்தட்டும்.

அறிவிப்பாளர்: ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 3955.

# குர்பானியின் சட்டங்கள் 11-A

## பிராணியை அறுக்கும் போது என்ன கூற வேண்டும்?

நான் துல்ஹஜ் பத்தாவது நாளன்று (பெருநாள் தொழுகையில்) அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடன் கலந்துகொண்டேன். அவர்கள் (பெருநாள்) தொழுகையைத் தொழுது ஸலாம் கொடுத்தார்களோ இல்லையோ, அங்கு குர்பானிப் பிராணிகளின் இறைச்சியைக் கண்டார்கள். நபியவர்கள் தொழுது முடிப்பதற்கு முன்பே அவை அறுக்கப்பட்டிருந்தன. எனவே, 'தாம் தொழுவதற்கு முன்பே குர்பானிப் பிராணியை அறுத்துவிட்டவர்' அல்லது 'நாம் தொழுவதற்கு முன்பே (குர்பானியை அறுத்துவிட்டவர்)' அதற்குப் பதிலாக மற்றொரு பிராணியை அறுக்கட்டும். (தொழுகை முடியும்வரை) அறுக்காமலிருந்தவர் தொழுகைக்குப் பின் அல்லாஹ்வின் பெயர் ('பிஸ்மில்லாஹ்...') சொல்லி அறுக்கட்டும்!' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்:ஜுன்தப் பின் (அப்தில்லாஹ் பின்) சுஃப்யான் அல்பஜலீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 3959

# குர்பானியின் சட்டங்கள் 11-B

## பிராணியை அறுக்கும் போது என்ன கூற வேண்டும்?

நபி (ﷺ) அவர்கள் இரண்டு கறுப்பு வெள்ளை செம்மறியாட்டுக் கடாக்களை குர்பானி கொடுத்தார்கள். அவர்கள் தமது பாதத்தை அவற்றின் பக்கவாட்டின் மீது வைத்துக்கொண்டு அல்லாஹ்வின் பெயர் (பிஸ்மில்லாஹ்) கூறி, அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று (தக்பீர்) சொல்லி அவற்றைத் தமது கையால் அறுத்ததை நான் பார்த்தேன்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், புகாரி 5558

# குர்பானியின் சட்டங்கள் 12

## குர்பானி பிராணிகளை கொடுப்பவரே தமது கையால் அறுப்பது

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கொம்புகள் உள்ள இரண்டு கறுப்பு வெள்ளை செம்மறியாட்டுக் கடாக்கள் பக்கம் சென்று தமது கரத்தால் அவற்றை அறுத்தார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், புகாரி 5554

# குர்பானியின் சட்டங்கள் 13

## பெண்கள் அறுக்கலாமா?

ஒரு பெண் ஓர் ஆட்டை (கூர்மையான) கல் ஒன்றால் அறுத்தார். அது குறித்து நபி (ﷺ) அவர்களிடம் கேட்கப்பட்டது. அவர்கள் அதை உண்ணும்படி உத்தர விட்டார்கள்.

குறிப்பு : மற்றோர் அறிவிப்பில், "கஅப் (ரலி) அவர்களுக்குரிய அடிமைப் பெண் ஒருவர் (இவ்விதம் செய்தார்)" என அன்சாரிகளில் ஒருவர் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம் தெரிவித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

அறிவிப்பாளர்: கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள், புகாரி 5504

# குர்பானியின் சட்டங்கள் 14

## பங்குவைத்தல்

'எனவே அதிலிருந்து நீங்களும் உண்ணுங்கள்;
கஷ்டப்படும் ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள்.'
அல்குர்ஆன் 22: 28

நபி (ﷺ) அவர்கள் நூறு ஒட்டகங்களை குர்பானி கொடுத்தார்கள். அப்போது அவற்றின் இறைச்சிகளை (ஏழைகளுக்கு)ப் பங்கிடுமாறு எனக்குக் கட்டளையிட்டார்கள். அவ்வாறே நான் அவற்றைப் பங்கிட்டேன். பின்பு அவற்றின் சேணங்களை (ஏழைகளுக்கு)ப் பங்கிடுமாறு எனக் குக் கட்டளையிட்டார்கள். அவ்வாறே நான் அவற்றைப் பங்கிட்டேன். பிறகு அவற்றின் தோல்களை (ஏழைகளுக்கு)ப் பங்கிடுமாறு எனக்குக் கட்டளையிட்டார்கள். அவ்வாறே நான் அவற்றைப் பங்கிட்டேன்.

அறிவிப்பாளர்: அலீ (ரலி) அவர்கள், புகாரி 1718

# குர்பானியின் சட்டங்கள் 15

## கூலியாகக் கொடுக்கக்கூடாது

நபி (ﷺ) அவர்கள் தமது குர்பானி ஒட்டகங்களை (அறுத்துப் பலியிடும் பொறுப்பை)க் கவனிக்குமாறும் அவற்றின் இறைச்சி, தோல், சேணம் ஆகிய அனைத்தையும் (தர்மமாகப்) பங்கிடுமாறும், உரிப்பதற்கான கூலியாக, அவற்றில் எதையும் கொடுக்கக் கூடாது என்றும் எனக்குக் கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பாளர்: அலீ (ரலி) அவர்கள், புகாரி 1717

# குர்பானியின் சட்டங்கள் 16

## எந்தப் பிராணியை குர்பானியாக கொடுப்பது சிறந்தது?

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:
பெருந்துடக்கிற்காகக் குளிப்பதைப் போன்று வெள்ளியன்று குளித்துவிட்டு (நேரத்தோடு பள்ளிவாசலுக்கு)ச் செல்பவர், ஓர் ஒட்டகத்தைக் குர்பானி கொடுத்தவர் போன்றவர் ஆவார். (அதற்கடுத்த) இரண்டாம் நேரத்தில் செல்பவர் ஒரு மாட்டைக் குர்பானி கொடுத்தவர் போன்றவர் ஆவார். மூன்றாம் நேரத்தில் செல்பவர் கொம்புள்ள ஆட்டைக் குர்பானி கொடுத்தவர் போன்றவர் ஆவார். நான்காம் நேரத்தில் செல்பவர் ஒரு கோழியைக் குர்பானி செய்தவர் போன்றவர் ஆவார். ஐந்தாம் நேரத்தில் செல்பவர் முட்டையைத் தர்மம் செய்தவர் போன்றவர் ஆவார்.

இமாம் (தமது அறையிலிருந்து) வெளியேறி (பள்ளிவாசலுக்குள் வந்து)விட்டால், (பெயர்களைப் பதிவு செய்யும்) வானவர்களும் இமாமின் சொற்பொழிவைச் செவியுற (உள்ளே) வந்துவிடுகின்றனர்.

குறிப்பு: நபியவர்கள் ஆட்டைக் குர்பானி கொடுத்ததால் ஆடு கொடுப்பது சிறந்தது என்ற கருத்தையும் சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1540**

# குர்பானியின் சட்டங்கள் 17

## மாற்றப்பட்ட சட்டம்

நபி (ﷺ) அவர்கள், "உங்களில் யார் குர்பானி பிராணியை அறுக்கிறாரோ அவர் (அறுத்ததிலிருந்து) மூன்று நாட்களுக்குப்பின் (அதிலிருந்து எதுவும் அவரது வீட்டில் எஞ்சியிருக்கும் நிலையில்) காலைப் பொழுதை அடைய வேண்டாம்" என்று சொன்னார்கள்.

அடுத்த ஆண்டு வந்தபோது, மக்கள் "அல்லாஹ்வின் தூதரே! சென்ற ஆண்டு செய்ததைப் போன்றே (இந்த ஆண்டும்) நாங்கள் செய்ய வேண்டுமா?" என்று கேட்டார்கள். நபி (ﷺ) அவர்கள் "நீங்களும் அதிலிருந்து உண்டு (மற்றவர்களுக்கும்) உண்ணக்கொடுங்கள். சேமித்து வைத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால், கடந்த ஆண்டில் மக்களுக்கு (பஞ்சத்தால்) சிரமம் ஏற்பட்டிருந்தது. ஆகவே, நீங்கள் அந்தச் சிரமத்தைப் போக்க (அவர்களுக்கு) உதவ வேண்டும் என்று நான் விரும்பினேன்" எனப் பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: சலமா பின் அல்அக்வஉ (ரலி) அவர்கள், புகாரி 5569